# கலை விழா

மார்ச் 25, 26, 27 - 1969



# කලා සංදර්ශණය

1969 [illegible], 26, 27.

686

ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලයීය
[illegible] දෙමළ සංගමය,
පේරාදෙණිය.



இலங்கைப் பல்கலைக் கழகத்
தமிழ்ச் சங்கம்,
பேராதனை.

நா. தில்லைநாதன்.

705
தில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன் : 585 Phone : 585

நங்கையர் விரும்பும் நவநாகரீக நகைகளுக்கு

## தங்கப்பவுண் நகை மாளிகை

# கே. என். எம். மீரான் சாஹிப்

கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்.

— *Visit* —

# K. N. M. MEERAN SAHIB

SOVEREIGN PALACE

**KANNATHIDDY — — JAFFNA.**

Sellams

FOR QUALITY PHOTOGRAPHS

JAFFNA

சிறந்த புகைப் படங்களுக்கு

**"செல்லம்ஸ் ஸ்ரூடியோ"**

94, 96, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

# சாஜான்ஸ்

**12, கண்டி**


**செல்வவிநாயகர்**

**கோவில் அருகாமையில்**

குங்கும அழகு சாதனங்களும்,
கற்பூரம், சாம்பிராணி,
வாசனை பத்திகளும்,
இந்தியன் வாசனை பீடாக்களும்,
வார, மாதப் பத்திரிகைகளும்,
சினிமா பாட்டுப் புத்தகங்களும்
கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விழாக்காண வாரீர்!



துள்ளிவரு மாவலியாள்
தூரப் பதுங்கிவிடத்
தெள்ளமுதத் தீஞ்சுவைசேர்
தெவிட்டாத கலைவெள்ளம்

கொள்ளை அழகுடனே
குதித்தோடி வருகிறது!
அள்ளியள்ளி மாந்த
அனைவரும் வாரீரோ

- *நிர்வாகக்குழு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பல்கலைக் கழகம்

தமிழ்த்துறை

'துறைத் தலைவர்'

பேராசிரியர் வி. செல்வநாயகம்

பல்கலைக்கழகப் பூங்கா

பேராதனை,

22-1-69.


இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்துறைத் தலைவரும் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவருமான

## பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள்

அளித்த

# வாழ்த்துச் செய்தி

**பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் நடாத்தும் முத்தமிழ் விழாவுக்கு வாழ்த்து மொழி.**

பேராதனைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ச் சங்கம் வழக்கம் போல இவ்வாண்டும் முத்தமிழ் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட விருக்கிறது. பேராதனையிலேயுள்ள தமிழ் மாணவர்களும் மாணவிகளும் தமிழின் பெயரால் ஒன்றுபட்டுத் தமிழையும் தமிழ்க் கலைகளையும் போற்றிவருதல் பாராட்டற்குரியது. அவர்கள் இன்றுபோல என்றும் ஆர்வமுடையோராய் இந்த நாட்டிலே தமிழையும் தமிழ்க்கலைகளையும் வளர்த்து வருவதோடு, தமிழ்ச்சாதியின் பண்பட்ட வாழ்க்கை முறையினை ஏனை மக்களும் கண்டு பாராட்டக்கூடிய வகையில் ஒழுகுதலே யாவராலும் விரும்பத்தக்கது. தமிழன்னைக்கு விழாவெடுத்துத் தங்கள் அன்பையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தும் இம்முயற்சி பாராட்டத்தகுந்த வகையில் நடைபெற, எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக.

வாழ்க தமிழ்

வளர்க தமிழினம்

**வி. செல்வநாயகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பல்கலைக் கழகம்

சிங்களத்துறை

'பகுதித் தலைவர்'

பேராசிரியர் டீ. ஈ. ஹெட்டியாராய்ச்சி

பல்கலைக்கழகப் பூங்கா

பேராதனை,

இலைத்தேய பகுதி,

31-1-69.

இலங்கைப் பல்கலைக்கழகச் சிங்களத்துறைப் பகுதி தலைவரான

## கலாநிதி டீ. ஈ. ஹெட்டியாராய்ச்சி அவர்கள்

அளித்த

# வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் நடாத்தும் முத்தமிழ் விழாவுக்கு வாழ்த்து மொழி.

பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கமானது இசை, நாடகம், மற்றும் தமிழ்க்கலை களை வளர்க்குமுகமாக வருடாந்த விழாக்களை நடத்தி வந்துள்ளதுடன் இக் கலைகளை இரசிக்கும்படியாகப் பல வழிகளில் முயற்சி எடுத்துள்ளது. இவ் வருடமும் இவ் விழாவை சிறப்பாக நடாத்துவதில் தமிழ் மாணவர்கள் கொண்டுள்ள பெரும் ஈடுபாடு போற்றுதற்குரியது. அதன் முழுமையான வெற்றிக்கு எனது வாழ்த்துக்களைத் தருகிறேன். பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் இச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி தமது ஒத்துழைப்பைக் காட்டுவார்கள் என நம்புகிறேன்.

டீ. ஈ. ஹெட்டியாராய்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சங்கப் பெரும்பொருளாளர்

## கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி.

பிரான்சு தேசத்திலே, பாரிஸ் பொன்னகரத்திலே, நடராஜச் சிலை அமைந்திருக்கின்றது. இங்கிலாந்திலே, பிரித்தானிய நூதனசாலையிலே, பழந்தமிழரின் யாழ் இன்றும் காட்சியளிக்கின்றது உலகில் எம்மூலைக்குச் சென்றாலும் உலகப் பொதுமறையாம் திருக்குறள் கண்ணைக் கவருகின்றது. அமெரிக்காவிலே, பிலடெல்பியா நகரிலே, பிள்ளையார் உருவம் இருக்கின்றது அத்தேசத்திலே, வாஷிங்டன் நகரிலே, அங்குள்ள கிராமியக் கலை நூல் நிலையத்தில், மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுப் பெருஞ் செல்வங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன

இலண்டன் வானொலி நிலையத்தில் வைர முத்துவின் மயான காண்டம் இன்றும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. இந்தோசீனாவிலே, தாய்லாந்திலே, பல்லவ அரசன் நந்திவர்மனில் பட்டப்பெயராகிய அவனி நாரணன் என்ற பெயரோடு விளங்கும் குளத்துக்கருகிலே தமிழ்க் கல்வெட்டு ஒன்று இருக்கின்றது. அந்நாட்டு மன்னர் முடி சூட்டுவிழாவிலே இன்றும் திருவாசகத்தின் திருவெம்பாவையின் ஒரு பகுதி ஓதப்பட்டு வருகின்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றிலே தென்னிந்தியக் கட்டக் கலைச் சின்னங்கள் இன்றும் இருக்கின்றன.

இவ்வாறு தமிழரின் கலைச் சின்னங்களையும் கலைப் பாதிப்பையும் உலகெங்கும் நாம் காணலாம். ஆம, உலகப் புகழ்பெற்ற சிறந்த கலைச் செல்வம்'படைத்த இனம் தமிழினம். ஓர் இனத்திற்குப் புகழையும் பெருமையையும் மதிப்பையும் தேடிக் கொடுப்பன கலைகளே. இதனாலேயே தமிழ் மக்கள் இறைவனுடன் இணைத்துக் கலைகளைப் போற்றினர். கலைகளுக்கு விழாவெடுத்தல் இறைவனுக்கு விழா எடுத்தற்குச் சமமாகும்.

இவ்வகையிற் பேராதனைப் பல்கலைக்கழகத்தினர் எடுக்கும் கலைவிழா முக்கியத்துவம் வாய்ந்தது. இலங்கையில் வேறெந்தத் தமிழ்ச் சங்கமும் இவ்வாறு மூன்று நாட்களுக்கு ஆண்டுதோறும் தொடர்ந்து கலைவிழா எடுப்பது கிடையாது. மேலும் பேராதனையிலுள்ள எல்லா இனத்து மாணவரும் ஆசிரியரும் பொது மக்களும் ஆண்டு தோறும் ஆவலுடன் எதிர்பார்க்கும் கலை நிகழ்ச்சியாக இவ்விழா அமைந்துவிட்டது. வெவ்வேறு சமுகத்தினரையும் மதத்தினரையும் இணைக்கும் பாலமாக இவ்விழா விளங்கிவருகின்றது. பயனும் இன்பமும் அளிக்கும் இவ்விழாவை எடுக்கும் தமிழ்ச் சங்கத்தினரைப் பாராட்டுகின்றோம்; உயரிய குறிக்கோளும் கலை மாண்பும் கொண்ட எமது தமிழ்ச் சங்கத்தினரின் கலைத் தொண்டு தொடர்ந்து கிடைப்பதாக.

(ஒப்பம்) சு. வித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலே தமிழ் நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படும்

## கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள்

அளித்த

# வாழ்த்துச் செய்தி.

கலையரசு

க. சொர்ணலிங்கம்,
மானிப்பாய்.
22-1-1969.

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்க உறுப்பினரால் வருடா வருடம் நடத்தி வரும் விழா இவ் வருடம் மார்ச் மாதம் 11 ம் திகதியில் நடப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். முன்பு பலமுறை நடைபெற்ற விழாக்களைப் பற்றி அறிந்திருக்கிறேன். அச்சமயங்களில் வெளியிட்ட மலர்களையும் படித்திருக்கிறேன். அவையாவும் நன்கு ஆராய்ச்சி செய்து எழுதப்பட்ட அறிவுப் களஞ்சியங்களென்றே சொல்லுவேன்.

நாடகத் துறையிலும் பல புதிய உத்திகளைப் புகுத்தி நாடகக் கலையை உயர்நிலைக்குக் கொண்டுவர அவர்கள் எடுத்துவரும் எத்தனங்களையும் அறிவேன். முக்கியமாக எங்கள் பண்டைக் காலத்து நாடகங்கள் அழிந்து போகாது பாதுகாப்பதுமன்றி இக் காலத்துள்ளோர்களும் பார்த்து இரசிக்கக்கூடிய வண்ணம் அவற்றை நடித்துக்காட்டி வருவது போற்றத்தக்கதே.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இவ்விழா வொன்றுக்கு நான் போயிருந்தேன். அங்கே ஒரு சமூக நாடகத்தைப் பார்த்தேன். அதுபோல ஒழுங்காகவும் ஒழுக்கத்துடனும் மற்றவர்களும் சமூக நாடகங்களை நடத்தமாட்டார்களா, என்ற எண்ணமே என்மனதில் எழுந்தது. பொதுவாக இவ்விழாவில் நான் கண்டு மகிழ்ந்தது பல்கலைக் கழக மாணவ மாணவிகள் அனுசரித்த ஆசாரமும் பண்புமாகும். இதனால் நமது எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமையுமென்று நம்புகிறேன். பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்க உறுப்பினருக்கு எனது நல்லாசிக

(ஒப்பம்) க. சொர்ணலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரும்
தமிழ் அறிஞருமாகிய

## பேராசிரியர் மு. வரதராசன் அவர்கள்
## அளித்த

# வாழ்த்துச் செய்தி.

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செனாய் நகர்
சென்னை—30
21-1-69.

அன்புடையீர்,

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் கலைவிழா இனிது நடைபெறுவதாக. விழா, கலைத் தெய்வத்திற்குப் பேராராதனையாக விளங்குவதாக.

தமிழ் மொழி பலவகைக் கலைகளையும் தொன்று தொட்டுப் போற்றிவந்த மொழி. தமிழ் இலக்கியம் பண்பாட்டை ஒரு கலையாக வளர்த்து வந்தது. புலவர் பலர் அன்று முதல் நேற்று வரையில் தம் எழுத்துக் கலையால் மக்கள் மனத்திற்கு விருந்து அளித்து வந்ததோடு மனப்பான்மையை உயர்த்தி வளம்பெறச் செய்து வந்திருக்கிறார்கள். இன்றைய இளைஞர்களும் அந்நெறியைப் போற்றிக் கலைமணம் கமழச் செய்வார்களாக.

அன்புள்ள

மு. வரதராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்தது வாழ்த்தொலி.....!

## முழக்கம் செய்வாய்!

மலர்தழுவி வருந் தென்றல் வருடுந் தோறும்
　　மயக்கத்தில் ஆழ்கின்றாய் இளமைக் கால
வளம் பொங்குங் கற்பனையில் புரண்டே உள்ளம்
　　வாடாமல் வாடுகிறாய் வளருங் காலம்
பழந் தோம்பைப் புரட்டுகின்ற செயல்கள் நீக்கிப்
　　பாய்ந்து வரும் புதுமைக்குத் தலைமைதாங்கும்
இளந் தோழா! கண்ணுறக்கம் நீங்கி இங்கே
　　இனி யதமிழ் மேடையிலே முழக்கம் செய்வாய்!

— திலிபன் —

## வாடாது வாழ்க....!

தென்னு தமிழ்த் தாயவளைத் துதித்துப் போற்றித்
　　தெய்வக் கலைத் தேவியடிதன்னை வாழ்த்தி — எம்
உள்மறைந்த திறமைகளை எடுத்துக் காட்டி
　　ஊக்கத்தை யூட்டி எமக்காக்கம் நல்கி உளங்
கொள்ளையிடும் தமிழ் மணத்தைத் தன்னுட்கூட்டிக்
　　கலைஞான ஒளிபரப்பும் கலை விழாவின் — தீங்
கள்நிறைந்த கவின் மலராய் மலர்ந்த இந்தக்
　　கலைமலர் வாடாது வாழ்க என்றும்.

செல்வி — யோகேஸ்வரி சின்னத்துரை

## உவப்பால் வாழ்த்திடுவோம்...!

சோலை மலர்ந்து மகிழ்சிந்தும் பனிநீரில்
காலை பலமலரும் கலகாநல் வீதியெங்குப்;
வேளை முழுதும் விரைந்து கலைபயிலும்
தோழர் பலரும் துடிக்கும் இதயங்கள்.
நாளை இவர்கள் நடத்தும் உலகத்தின்
ஊழை உணர்ந்து உயரட்டும் தார்வழியே.
பாழை நினைந்து பயிலும் நெறியொழித்துப்
பண்ணும் புதுமுறைகள் பதியும் நம் ஈழமெலாம்.

என்ற நெறியில் எழுமிக் கலைவிழா
நன்று சிறந்து நலமே நிறைகவென
ஒன்றும் உளத்தோ டுவப்பாக வாழ்த்திடுவோம்!
வென்று தமிழ்வளர்த்த வீர இதயங்கள்
என்றும் கலைவளர்க்கும் எழிற்கழகத் துண்டன்றே!
குன்று அடர்ந்த குளிர்வைக் கொட்டிவர
மன்று மலையும்; மதிமுகங்கள் மகிழ்சிந்த
நின்று நிறையும் பெருவிழாச் சீருறுக.

ஆசி. செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் குரல்

— என். வி. எம். குமாரசாமி —

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தென்றல் வீசுகின்றது. அதில் தமிழ் மணம் கமழ்கின்றது. காரணம் தமிழ்ச் சங்கம் தமிழ்க் கலைக்குப் பெருவிழா எடுத்துக்கொண்டிருக்கின்றது. அது அறிவியல் விழாவாக - வெற்றிவிழாவாக நடைபெற்றுக்கொண்டிருப்பதைக் காணும் தமிழர்களாகிய எம்முள்ளம் பூரிப்படைகின்றது.'

— உங்கள் உள்ளத்து உணர்வுகள் இப்படித்தானே உரைக்கின்றன? இதை உணருங்கால் என் உள்ளம் மகிழ்ச்சியாற் துள்ளுகின்றது. "தமிழ்ச் சங்கத்தின் மூலம பணிசெய்" — என்று நீங்கள் இட்ட கட்டளையை உங்களுக்கு நிறைவைக் தரக்கூடியமுறையில் நடப்பு வருடச் செயற்குழுவினர் செய்து முடித்துவிட்டனரென்று நம்புகின்றேன். கடந்த இரண்டு தவணைகளில் நடைபெற்ற தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள் அனைத்தும் உங்களுக்கு நிறைவையே வழங்கியிருக்குமென்று நினைக்கின்றேன். எந்த நேரமும் தமிழ்ச்சங்கம் விழிப்புடன் செயலாற்றியிருக்கின்றது. அறிஞர்கள் பலரின் சொற்பொழிவுகள் அடிக்கடி இடம்பெற்றிருக்கின்றன. அத்துடன் நாடக விழாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் இடம் பெற்ற நாடகங்கள் அனைத்தும் தமிழ் நாடகக்கலை வருங்காலத் தமிழ் இளைஞர்களால் அற்புதமாக வளருமென்று உறுதி கூறுவதாக அமைந்து ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன தமிழில் இயல், இசை, போன்ற நாடகக்கலை வளரவில்லையென்று கூறும் சில விமரிசகர்களின் ஏக்கம் இனி நிச்சயமாகத் தீர்க்கப்படுமென்று நம்பலாம்.

தமிழ்ச்சங்க உறுப்பினர்களிடம் மிக அபாரமான திறமைகள், இலை, மறைகாய் போல் மறைந்திருக்கின்றன. அதனை வெளிக் கொணர்ந்து உண்மைத் திறமைக்கு மதிப்பளிக்கத் தமிழ்ச்சங்கம் அரும்பாடுபட்டது. நாடகப்போட்டி, சிறுகதைப்போட்டி, கவிதைப்போட்டி, பேச்சுப்போட்டி, விவாதப்போட்டி போன்றவற்றின் மூலம் இருளிலிருந்த திறமைசாலிகள் பலரை ஒளிக்குக் கொண்டுவந்திருக்கின்றோம். தமிழ் உலகம் இவர்களை இனம் கண்டு தக்கபடி பயன்படுத்தவேண்டும்.

தமிழ்ச் ங்கம் இலக்கிய வளர்ச்சியில் மாத்திரம் அக்கறை கொண்டதல்ல. தமிழில் அக்கறை கொண்டுள்ளது. இதனால்தான் கலைவிழாவில் புதிய துறைகளில் கவனம் செலுத்தி இருக்கின்றோம். "ஆய கலைகள் அறுபத்தி நான்கு" அன்றோ! தமிழ் குறுகிய எல்லைக்குள் நின்று சுழல்வதை விட்டுப் பரவிப் பயன் கொடுக்கவேண்டுமென்பது எமது பேரவா! தமிழன் அப்படி வாழ்ந்தான், இப்படி வாழ்ந்தான் என்று வீணைகப் பழங்கதைகள் பேசுவதிற் பயனில்லை. அவன் எப்படி வாழ்வான் என்பதை ஒவ்வொரு தமிழ் இளைஞனும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

"புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
..................................................
...............மெல்லத் தமிழினிச் சாகும்"

— என்று பதறித் துடித்தான் பாரதி. அவன் வடித்த இரத்தக் கண்ணீரை எம்மில் எத்தனைபேர் துடைத்தனர்? மேற்கே வளரும் அந்தக் கலைகளைத் தமிழில் ஏன் துரித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெதியிற் கொண்டுவர முடியாது? ஆங்கிலம் தெரிந்த தமிழர்கள், ஆங்கிலத்திற் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் இதைப்பற்றிக் கொஞ்சம் நிதானமாகவே சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். சிந்தித்துவிட்டு இந்தக் கேள்வியைக் கேளுங்கள். "நான் தமிழனாகப் பிறந்து தமிழுக்கு என்ன செய்தேன்?" - காலம் விரைகின்றது. கடமையை உணர்ந்து விட்டீர்கள். இன்றே செய்யுங்கள். அதை நன்றே செய்யுங்கள்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் தமிழ் மாணவர்களாகிய நாம் தமிழ்க்கலையை வளம்படுத்த வேண்டியவர்களாவோம். "தமிழால் முடியாதது ஒன்றும் இல்லை" என்று துணிவுகொண்டு தமிழ் அன்னையைப் புதிய கலைகளால் அலங்கரிக்க வேண்டும். இலக்கியக் கலை, நாடகக்கலை, இசைக்கலை போன்றவற்றால் மாத்திரம் தமிழ் வளர்ந்துவிடாது. புதிய விஞ்ஞானக் கலைகள் தமிழுக்குத் தமிழாகி வரவேண்டும். எமது எதிர்காலத் தமிழ்க் குழந்தைகள் அறிவுபெற இவை அவசியமன்றோ? ஆகவே பொருளியல், புவியியல் படிக்கும் மாணவர்கள் அந்தந்தக் கலையைத் தமிழில் வளர்க்கவும் பாடுபடவேண்டும். தமிழில் தாங்களாகவே கட்டுரைகள், நூல்கள் எழுதுதல் வேண்டும். அத்துடன் பிறமொழியிலுள்ள நல்லனவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துத் தமிழை வளம் படுத்துதல் வேண்டும். தமிழில் இல்லை என்ற சொல் இல்லை என்று ஆக்குவோம்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கே சேர்ப்பீர்"

தேமதுரத் தமிழ் வாழ்க!

இந்த மானிலத்தைப் பாராய் மகனே
உந்தன் - வாழ்க்கைதனை உணர்வாய் மகனே - இளம்
மனத்தில் வலிமைதனை ஏற்றடா - முக
வாட்டமதை உழைப்பால் மாற்றடா.

— பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை வளர்ப்போம்!

"கலை", ஒவ்வொரு இனத்துக்கும் உரிய ஒவ்வொரு கலையுண்டு, அதை வளர்ப்பதுண்டு, வழிப்படுத்துவதுண்டு. ஒரு மொழியின் தனித்துவத்தைப் பேணவும், சிறப்பை வளர்க்கவுங் கலைகள் இன்றியமையாதன. அதுமட்டுமல்ல, சமூக அமைதிக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்குங் கூடக் கலைகள் உதவுகின்றன.

கலைகள், மக்களது வாழ்க்கைத்தரம், கல்விநிலை என்பவற்றுடன் பரஸ்பரத் தொடர்புடையது. ஒன்றின் வளர்ச்சி, மற்றதன் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும். தமிழரின் கலை அபிவிருத்தியானது இலக்கியம், இசை, நடனம், நாடகம் போன்றவற்றுடன் முழுமையடையக் கூடாது. சகல அறிவுசார் கலைகளும் வளர வேண்டும். அப்போதுதான் மக்களுக்குக் கலை உதவமுடியும்.

உலகில் வளர்ந்த வளம் பெற்ற மொழிகளை நோக்கினால், அவை இலக்கியம் மட்டுமல்ல, அறிவுசார் கலைகள், அரசியல் நிர்வாகம், இராசதந்திர சேவைகள் போன்றவற்றுக்குப் பயன் படுகின்றன. இவற்றுடன் ஒப்பத் தமிழும் வளர வேண்டுமானால், அவை பயன்படுந் துறைகளிற் தமிழும் பயன்பட வேண்டும். அப்போதுதான் தமிழ் வளர்ந்து வளம்பெற முடியும்.

எனவே தமிழ்க் கலைகள் குறுகிய எல்லைகளை விடுத்து, வளர்ந்து, மனித இனத்தின் விடுதலைக்கும் உயர்வுக்கும் உதவட்டும்.

ஜேம்ஸ் பீரிஸ் மண்டபம்

நா. தில்லை நாதன்

# කලා උළෙලට සාදර ඇරයුමකි.

පේරාදෙණිය ශාස්ත්‍ර ප්‍රබෝධයෙන් ඒකාලෝක වෙයි. එය දෙමළ සංගමය මඟින් පැවත්වෙයි. අවුරුදු දහනවයක් තිස්සේ, වාර්ෂිකව පැවත්වෙන කලා උළෙල මෙවර විද්‍යා හා ශාස්ත්‍ර මහා උළෙලක් වශයෙන් පැවත්වෙයි.

සාහිත්‍ය, සංගීත, නාට්‍ය ආදී කලාවන්ගේ අභිවෘධිය පමණක් නොසෑහෙයි. සෑම විද්‍යාවක්ම, සෑම කලාවක්ම සවභාෂාවන්හි දියුණුවිය යුතුය. දෙමළ සංගමයේ විධායක කමිටුව වන අප මේ වර්ෂයේ නොයෙක් විශේෂාංග ඉදිරිපත් කෙළෙමු. ඒවා අතර නාට්‍ය තරඟ, කවි තරඟ, කෙටිකථා තරඟ, විවාද තරඟ ආදිය විශේෂයෙන් සඳහන් කළ හැක. ශිෂ්‍යයන් මඟින්ම නාට්‍ය දහසයක් කරලියට ගෙනාවෙමු.

අප උළෙලට දෙමළ හා සිංහල කලා ලෝකයන්හි නොයෙක් වැදගත්හු සුභපැතුම් එවා ඇත්තාහ. එම උළෙල මාර්තු මස 25 වන දින සවස 4ට මහාචාර්ය වේල්වනායගම් මහතා විසින් ආරම්භ කරනු ඇත.

මෙම උළෙලෙහි ලංකාවේ ප්‍රසිද්ධ විද්වතුන් සහභාගිවන ආර්ථික, සාහිත්‍ය, සංගීත, භාරත නැටුම්, නාට්‍ය ආදී අංශයන් සඳහාවූ සාකච්ඡා මාලාව විශේෂාංගයවෙනවා ඇත. මෙයට සහභාගී වෙන ලෙස ප්‍රභූවරුන් හා මිත්‍රයින් සැමට සාදරයෙන් ඇරයුම් කරන්නෙමු.

නා. තිල්ලෛනාදන්
(විධායක කමිටුව වෙනුවෙන්)

ජේම්ස් පීරිස් ශාලාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவளர்ச்சியும் இலங்கைத் தமிழரும்

கா. இந்திரபாலா
(விரிவுரையாளர், வரலாற்றுத்துறை.)

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இலங்கையிலே கலைத்துறையிற் சில முக்கியமான அபிவிருத்திகள் ஏற்பட்டுவந்துள்ளன என்பதை இன்று பலரும் ஏற்றுக்கொள்வர். இலங்கை அரசியற் சுதந்திரம் பெற்ற பின்னர் இத்தகைய அபிவிருத்திகள் ஏற்படும் என்பதைப் பலரும் எதிர்பார்த்திருப்பர். கலைத்துறையிலே ஏற்பட்டுவந்துள்ள இந்த அபிவிருத்திகளை எடுத்து ஆராய்ந்தால், இவை பெரும்பாலும் சிங்களக் கலைகளைப் பொறுத்த மட்டிலேதான் ஏற்பட்டுள்ளன என்பதைக் கவனித்துக் கொள்ளலாம்.

இலங்கையிலே எந்தத் துறையில் அபிவிருத்தி ஏற்பட்டாலும், அந்த அபிவிருத்தியிலே இலங்கையின் எல்லா இனப்பிரிவுகளும், சிறப்பாகத் தமிழரும் சிங்களவரும், பங்குகொள்ளவேண்டியது அவசியமாகும். இல்லாவிடில், ஒரு சீரான அபிவிருத்தி நாடெங்கிலும் ஏற்படுவதற்குப் பதிலாக, நாட்டின் ஒரு பாகம் பின்தங்கி நிற்க இன்னொரு பாகம் முன்னேறிச் செல்லும். இந்த நிலை விபரீத விளைவுகளை உண்டுபண்ணக்கூடியதாகும். தேசீய ஒற்றுமையையோ, தேசீய முன்னேற்றத்தையோ ஏற்படுத்த முடியாத நிலையிலே, பல்வேறு இனங்களுக்கிடையேயும் பிரதேசங்களுக்கிடையேயும் ஏற்றத்தாழ்வுகளையே ஏற்படுத்த நேரிடும். இது எந்தத் துறையின் அபிவிருத்தியைப் பொறுத்தமட்டிலும் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

சிங்களக் கலைத்துறையிலே ஏற்பட்ட அபிவிருத்திகளை இங்கு விரிவாக எடுத்துக் கூறமுடியாது. அவற்றை மிகச் சுருக்கமாக மட்டுமே இங்கு சுட்டிக்காட்ட முடியும். சிங்கள நாடகக்கலையை எடுத்துக்கொண்டால், 1956 இல் பேராசிரியர் ஸரத்சந்த்ர தயாரித்து மேடையேற்றிய "மனமே" நாடகத்துடன் ஒரு பெரும் புரட்சிகரமான அபிவிருத்தி ஏற்பட்டு வந்துள்ளது. இசைத்துறையிலே அமரதேவ, ஸாந்தி கீததேவ போன்றவர்கள் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். சினிமாக் கலையிலே லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், ஸிரிகுணஸிங்ஹ, நிஹால் ஸிங்ஹ போன்றவர்கள் வங்காளச் சினிமாக் கலையின் செல்வாக்கிற்கு உட்பட்டுப் பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தி வருகிறார்கள். சிறிய இடமாகிய இலங்கையிலே குறைந்த வசதிகளுடன் தயாரிக்கப்பட்ட 'கம்பெரலிய' என்ற படம் அகில இந்தியப் போட்டியிலே (பெருஞ்செலவுகொண்டு சிறந்த வசதிகளுடன் அகண்ட இந்தியாவிலே தயாரிக்கப்பட்ட படங்களுடன் போட்டியிட்டு) முதலாவது பரிசைப் பெறுமளவிற்குச் சிங்களச் சினிமாக் கலையின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஓவியக் கலைத் துறையிலே கூட ஸேநக, ஸேனநாயக போன்றோர் முன்னேற்றத்தை ஏற்படுத்திவருகின்றனர். இப்படியாக, நடனக்கலைத் துறையிலும் வஜிரா, சித்ரஸேந, வஸந்தகுமார போன்றவர்களுடைய விடா முயற்சிகளினாலே முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. ஆனால் இதே போன்ற முன்னேற்றம் தமிழ்க்கலைகளைப் பொறுத்தமட்டிலும் ஏற்படுகின்றது. என்று நேர்மையுடன் ஆராய்பவர் எவரும் கூறமாட்டார்கள். பரதநாட்டியத்தையும் நாட்டுக் கூத்தையும் பேணுவதற்குச் சில அரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இத்துறைகளிலே கூடப் புதிய அபிவிருத்திகளை உண்டுபண்ணுவதற்கு முயற்சிகள் இன்னும் எடுக்கப்படவில்லை என்றே கூறவேண்டும். சிங்களக் கலைத்துறையிலே இன்று நடப்பது பேணல் முயற்சி அன்று, அபிவிருத்தி முயற்சி என்பதை நாம் மறக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பின்தங்கிய நிலைக்குப்பல காரணங்கள் உள. அவற்றை இங்கு விரிவாக ஆராய்ந்து காட்டமுடியாது. அரசியலாதிக்கமும் வசதிகளும் இல்லாமையே இந்த நிலைக்குக் காரணம் என்று கூறிவிடுவது முற்றிலும் சரியானதன்று. தமிழர், இந்த நாட்டிலே சிறுபான்மையினராக இருப்பதுதான் முக்கிய காரணம் என்று சொல்வதும் பிழையாகும். இக்காரணங்கள் பின்தங்கிய நிலைக்கு ஓரளவில் மட்டுமே உதவியுள்ளன. சினிமாக் கலையை எடுத்துக்கொண்டால், சிங்களத் தயாரிப்பாளருக்குள்ள வசதிகளையும் ஆதிக்கத்தையும் விடத் தமிழ்த்தயாரிப்பாளருக்கே கூடிய வசதிகளும் ஆதிக்கமும் இருக்கின்றன. உண்மையில் சிங்களத் தயாரிப்பாளர் பிற தயாரிப்பாளருடைய எதிர்ப்பையுஞ் சமாளித்தே சிறந்த படங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது. அரசியலாதிக்கமும பெரும்பான்மைப்பலமும் இல்லாமல், முன்பு தமிழர் இந்நாட்டின் கலைவளர்ச்சிக்கு உதவியிருக்கின்றனர். தமிழருடைய நாட்டுக்கூத்து இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட பின்பே சிங்கள நாடகக்கலை வளரத்தொடங்கியது. தற்காலத்திலே நாடகத்துறையில் ஒரு புரட்சியையே உண்டுபண்ணிய 'மனமே' நாடகம் ஒரு தமிழ் நாடகமரபைச் சேர்ந்த நாடகம். இசைத்துறையிலும் சிங்கள இசைக் கலையின் வரலாறு தென்னாட்டு இசை இங்கு அறிமுகப்படுத்தப்பட்டதோடுதான் வளரத்தொடங்கியது. சிங்களத்திலுள்ள மிக முற்பட்ட இசைமுறைகளாகிய வண்ணம், விரஹ, வர்ணனு என்பவை தமிழ்நாட்டு இசை முறைகள் இங்கு செல்வாக்குப் பெற்றதன் விளைவாகக் கண்டியரசர் காலத்திலே தோன்றியவையாகும். இதேபோல, நடனத்துறையிலும் கண்டிய நடனத்தின் வளர்ச்சிக்குத் தென்னாட்டில் வளர்க்கப்பட்ட பரதநாட்டியம், கதகளி போன்ற நடனமுறைகள் உதவியிருக்கின்றன. இவ்விஷயங்களைச் சிங்களக் கலைவரலாற்றை ஆராய்ந்த பேராசிரியர் ஸரத்சந்த்ர போன்றவர்களே எடுத்துக் கூறியுள்ளனர். இந்தப் பழம் பெருமைகளைத் தமிழர் இன்று பேசிக்கொள்வதுடன் நின்றுவிடுவதே பின்தங்கிய நிலைக்கு வழி வகுக்கின்றது. தென்னிந்தியாவில் இத்துறைகளிலே முன்னேற்றம் ஏற்படுகின்றது என்றெல்லாம் கூறிக்கொள்வதும் பிழை. இலங்கைத் தமிழர் என்ற முறையிலே இலங்கையின் கலை அபிவிருத்தியில் தாம் பெற்றுள்ள பங்கை இலங்கைத் தமிழர் உணரவேண்டும். இந்நாட்டிலே ஒரு சமூகம் முன்னேற இன்னொரு சமூகம் பின்தங்கிநிற்கக்கூடாது என்பதையும் ஒரு சமூகம் கலைத்துறையிலும் பிறதுறைகளிலும் தேசீய முன்னேற்றத்துக்காகப் பாடுபடும்போது ஏனைய சமூகங்களும் அம்முயற்சிகளிலே ஈடுபட வேண்டும் என்பதையும் உணர்ந்து, பழைய பெருமையைப் பேசுவதைக் குறைத்துக் கலைத்துறையிலே சம அபிவிருத்தியை ஏற்படுத்த தமிழ்க் கலைஞர்கள் முயற்சிக்க வேண்டும்.

---

ஒரு விளக்கின் சுடர் அணைந்து போகாமல் எரிந்து கொண்டிருந்தால் அது இன்னொரு விளக்கை ஏற்றி வைக்கமுடியும். அதைப்போல, பள்ளி ஆசிரியராய் இருப்பவர்கள் மேலும் கல்வி அறிவு பெற்றுக்கொண்டிருந்தால்தான் மாணாக்கனுக்குப் போதிக்க இயலும்"

கவி தாகூர்

---

"சயன்ஸ் அவசியமா? இலக்கியம் அவசியமா? இரண்டும் அவசியந்தான். சயன்ஸ் இல்லாவிட்டால் அசட்டுத்தனம் மலியும், இலக்கியம் இல்லாவிட்டால் நாம் உணர்ச்சியற்ற இயந்திரங்களாகிவிடுவோம். தெய்வத்தைப் படைப்பது கவிஞன்; தெய்வத்தை அறிபவன் சயன்டிஸ்ட்"

புதுமைப்பித்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயமும் விழாக்களும்

விழாக்கள் எல்லாச் சமுதாயங்களிலும் காணப்படுவன. பெரும்பாலும் தொடக்கத்திலே சமய அடிப்படையிற் றோன்றும் விழாக்கள் காலப்போக்கில் காரணப் பொருண்மை மறைந்து கேளிக்கை வைபவங்களாகவும் சமுதாயக் கொண்டாட்டங்களாகவும் அமைவதும் உண்டு. இது உலகப் பொதுவான ஒரு வளர்ச்சிப் போக்கு எனலாம். சில வேளைகளில் ஒரு தேசத்தின் பகுதியிற் சிறிய விழாவாகத் தொடங்குவது நாளடைவில் "தேசிய" விழாவாக மாறுவதும் உண்டு. வேனில் விழா முதல் இந்திரவிழா வரை பண்டைத் தமிழகத்தில் பல விதமான விழாக்கள் நடைபெற்றன. அவற்றிற் சில பிற்காலத்தில் வழக்கொழிந்தன; சில இன்றும் கொண்டாடப் பெறுகின்றன.

இருபதாம் நூற்றாண்டிலே சமுதாயமும் அரசியலும் முக்கியமடைந்தன. பாரதி தேசபக்தியைத் தெய்வ பக்தியாக மாற்றினான். பாரதிக்கு முன்னோடியாக விளங்கிய சுந்தரம்பிள்ளையும், அந்தணர் வளர்க்கும் செந்தீயிலும், நாட்டுப்பற்று மனத்திலே மூட்டும் தீயே சிறந்தது என்று பாடினார். அவரே நூலிற் கடவுள் வணக்கங் கூறுமிடத்து, தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடிப் புதியதொரு கவிப்பொருளைத் தோற்றுவித்தார். சுந்தரம்பிள்ளை, பாரதி, பாரதிதாசன் முதலிய கவிஞரது பாடல்களினால் உந்தப்பெற்றும், பொதுவாக நாட்டு மக்களிடையே மூண்டெழுந்த விடுதலை வேட்கை, தேசாபிமானம் முதலியவற்றின் விளைவாகவும், இனம், மொழி ஆகியவற்றைப் போற்றும் புதிய புதிய விழாக்கள் இந் நூற்றாண்டிலே தோன்றியுள்ளன. பெரும் புலவர்களுக்கும் தற்காலத்திலே விழாக்கள் எடுக்கப்படுகின்றன.

இத்தகைய விழாக்களின் நோக்கம் எதுவாயிருப்பினும் - தொடக்கத்தில் அது பயன் தருவதாகவே இருந்தது - நடைமுறையில் இவ்விழாக்களிற் பெரும்பாலானவை பின்னோக்கிப் பெருமையுடன் பழங்காலச் சிறப்புக் கூறுவனவாயுள்ளன. நியாயமான பழம்பெருமை சமுதாய உறுதிப்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாததே. ஆனால் நிதானமற்ற - கண்மூடித்தனமான - பழம்பெருமை முன்னேற்றத்துக்குத் தடையாகவே உள்ளது. நிகழ் காலக் குறைபாடுகளுக்கும் தேக்க நிலைக்கும் ஈடுசெய்யும் மனோபாவத்துடனேயே பொற் கால மேன்மைகள் புகழ்ந்துரைக்கப்படுகின்றன

தற்காலத் தமிழர் சமுதாயத்தின் சாதனைகளையும் வெற்றிகளையும் கொண்டாடுவதற்கு விழா எடுத்தால், அது வரலாற்றை வழி நடத்துவதற்கு ஏதுவாயமையும். ஆனால் "சங்ககாலத் தமிழரின்" சங்கதிகள் பேசித் தலைநிறைவு பெறுவது இரவல் வாழ்க்கை நடத்துவதற்குச் சமானமாகும். ஆகவே எமது மாணவரும் வாலிபரும் "தமிழ்" விழாக்கள் எடுப்பதிலும், பொருளியல் விழாக்களும், விஞ்ஞான விழாக்களும் அவை போன்ற பிற விழாக்களும் எடுப்பார்களாயின் பயன்பெரிதாகும். தமிழர் வாழ்வியல் இலக்கண இலக்கியத்துடன் நிறைவு எய்திட முடியுமா? ஒருபோதும் முடியாது.

இன்னொன்று. விழாக்கள் சமுதாயத்தை ஒன்றுபடுத்தி அதன் கட்டுக்கோப்பை வலுப்படுத்துஞ் சாதனங்கள் என்று சமூகவியலார் கூறுவர். ஆனால் சாதி, சமயம், வர்க்கம் என்பவற்றின் அடிப்படையிற் பிளவுண்டிருக்கும் சமுதாயத்திற் பொதுவான விழாக்கள் இருக்கவியலுமோ என்பது சந்தேகமே. பேதங்களற்ற சமுதாயத்திலேயே யாவருக்கும் உரிய - பொதுவான - விழாக்கள் கொண்டாடப்பட முடியும். இதற்கும் சமுதாய மாற்றமும், முன்னேற்றமும் இன்றியமையாதன.

பல்கலைக்கழக மாணவர் விழா எடுக்கும் சமயத்தில் இவற்றைச் சிந்தித்தல் தகும். விழாவின் இலட்சியம் எமது எண்ணங்களை விசாலமடையச் செய்வதாக இருத்தல் வேண்டும். சுயதிருப்தி என்ற சுவருக்குள் "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்" பேசுவதாக இருக்கக்கூடாது. பல்கலைக்கழக விழா பல்துறை விழாவாக அமைவதாக!

க. கைலாசபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய வளர்ச்சியிற் கலையின் பங்கு

(கலாநிதி சு. வித்தியானந்தன்)

சமுதாய வளர்ச்சியிற் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் உள்ள பங்கினை நாம் சரிவர மதிப்பிடத் தவறி விடுகின்றோம். இதற்குக் காரணம் உண்டு. கலைகளின் பல்வேறு பண்பு களையும், கலைகளின் நடைமுறைகளையும், பொதுமக்களின் வாழ்க்கையிற் கலைகள் ஏற்படுத்தும் விளைவுகளையும் நோக்கப் பலருக்குச் சந்தர்ப்பங் கிடையாது. கலைகளைப் பற்றிய ஞானமும் பலருக்கு இல்லை. மேலும், சமூக அமைப்பிற் கலைக்குரிய இடத்தைச் சரிவர அறிந்து கொள்ள இன்றைய வாழ்க்கை முறைகளும் தடையாக இருக்கின்றன. தற்காலப் பண் பாட்டின் பல வகைப்பட்ட அம்சங்களும், வாழ்க்கையின் அவசர ஓட்டமும், கலைகளை விளங்கிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கமாட்டா. நாளாந்த வாழ்க்கையைக்கொண்டு நடத்துவதிலுள்ள ஓயாத தொல்லைகளினலும், வாழ்விற்கு இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்வதிலுள்ள சிக்கல்களினலும் கலைகளைப் பற்றிச் சிந்திக்கவே பெரும்பாலான வருக்கு நேரமில்லை; மனப்பாங்குமில்லை. இதனுற் பலருக்குக் கலைகளைப் பற்றிய எவ்வித விளக்கமுமே கிடையாது. இதனால் வாழ்க்கையிலிருந்து கலைகளைப் பிரிக்கும் ஒரு மனப் பான்மையை நாம் அவதானிக்கலாம். வசதியோ சந்தர்ப்பமோ நேரமோ ஏற்பட்டால் அனுபவிக்கும் இன்பமாக—ஒரு சிலராலேயே புரிந்து கொள்ளப்படும் அனுபவமாக—கலை அமைந்து விட்டது. சமுதாயத்திற்கும் கலைகளுக்கும் இடையேயுள்ள பிரிவு அதிகமாக இருப்பதனுல், கலைகளைப் பற்றிச் சரியான விளக்கம் பெறுவது பொறுப்பாக இருக்கின்றது. கலைகளோடு தொடர்புடையவர்களுக்கு—அதாவது கலைஞர்களுக்கும் கலை இரசிகர்களுக்கும் இது பற்றி மயக்கம் ஏற்பட்டுக் கலைகளின் மதிப்புப் பற்றியும் வருங்கால நிலை பற்றியும் தெளிவான விளக்கம் இல்லாமற் போய்விடுகின்றது.

ஆனல், வரலாற்றை நோக்கும்போது, கலை திடீரெனத் தோன்றவில்லையென நாம் உணர்கின்றோம். மனிதன் தோன்றிய போதே கலைகளும் தோன்றின. அவை மனித னேடு சேர்ந்து வளர்ந்தன. அவை குறிப்பிட்ட ஒரு சிலரின் சொத்தாகவோ அல்லது உயரிய வர்க்கத்தின் தனி உரிமையாகவோ இருக்கவில்லை. அவை வாழ் வுக்கோடு ஒன்றிச் சமுதாய வளர்ச்சி தேய்வுகளுக்கிணங்க வளர்ந்தும் தேய்ந்தும் வந்திருக்கின்றன; வாழ்க்கைமுறையோடு பிணைக்கப்பட்டிருக்கின்றன.

வாழ்க்கைபோலக் கலைகளும் மனித அனுபவத்திலேயே வளர்ச்சியடைந்திருக் கின்றன. ஒரு காலத்திலே எமது கலைகள் யாவும் சமயச் சார்பாக அமைந்தமை இவ் வுண்மையை உணர்த்துகின்றது. அக்காலத்திற் கோயில்களே கலைகளின் இருப்பிடமாக விளங்கின. ஓவியம், சிற்பம், இசை, நடனம், கல்வி முதலியன யாவும் அக்காலச் சமுதாய அமைப்பிற்கும் போக்கிற்குமிணங்கச் சமயச் சார்புடையனவாகக், கோயில்கள் வளர்த்த கலைகளாக இருந்தன.

நாட்டிலே பொருளாதார விருத்தி ஏற்பட்டுத் தொழில்கள் மட்டும் வளர்ச்சி யடைந்தாற் போதாது. கலையும் வளர்ச்சியடையவேண்டும். நாட்டு வளர்ச்சிக்குத் தொழில் விருத்தியும் கலை விருத்தியும் இன்றியமையாதவை. பொருளாதார விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற சமுகம் கலை வளர்ச்சியும் பெற்றிருந்தாலே அச்சமுகம் உயிருள்ள சமுகமாகின்றது. நாட்டின் பெருமை கலையிலே தங்கியுள்ளது. தொழிலால் உரம் ஏறுகிறது; கலையினால் அந்த உரத்திற்கு மெருகு ஏறுகின்றது. தொழில் செல்வத்தைத் தரும்; கலை அமைதியையும் நிறைவையுந் தரும்.

இதனாலேயே பாரதியார்,

காவியம் செய்வோம் — நல்ல
காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் — கொல்லர்
உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் — நல்ல
ஊசிகள் செய்வோம்

என எம்மை அழைக்கின்றார்.

தொழிலுக்கும் கலைக்கும் தெய்வமாகிய கலைமகளை நவராத்திரியிற் கொண்டாடுகிறோம். சரசுவதி பூசையிற் கலைமகளை வழிபடுகின்றோம். அதற்கு அடுத்த நாள் ஆயுத பூசை என்று தொழிலாளர் கொண்டாடுகின்றனர். இதனை நினைந்தே பாரதி,

கைவருந்த உழைப்பவர் தெய்வம்;
கவிஞர் தெய்வம்; கடவுளர் தெய்வம்

என்று வெள்ளைத் தாமரைப் பூவிலிருக்கும் கலைவாணியைப் பாடுகின்றார். இதனாலேயே,

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே
பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே
பரத நாட்டியக் கூத்திடுவீரே

என்றார் பாரதியார். இரும்பைக் காய்ச்சி உருக்கியும், இயந்திரங்கள் வகுத்தும், கரும்பைச் சாறு பிழிந்தும், மண்ணெடுத்துக் குளங்கள் செய்தும், உண்ணக் காய்கனி தந்தும், உழுது நன் செய் பயிரிட்டும் ஆயிரந் தொழில் செய்திடுவீரே என்று தட்டி எழுப்பிய பாரதியார், அதே மூச்சிலே காவியம் பாடியும் நாட்டியம் ஆடியும் கலைகளை வளர்த்திடுவீரே என்று பொன்மொழி இயம்பினார். ஆகவே, தொழில் நலனும் கலைப் பயனுமுள்ள நாடே நாடெனப்படும். கலைஞனின் படைப்பே தொழிலாளியின் படைப்பிலும் உயரியது. தொழிலாளி கைகளையும் கருவிகளையும் அதிகமாகப் பயன்படுத்துகிறான்; கலைஞன் கை கருவி ஆகியவற்றுடன் அறிவையும் கற்பனையையும் பெரிதும் பயன் படுத்துகிறான். அதனாலேயே கலைக்கு அதிக மதிப்பு; கையும் கருவியும் எல்லோரிடமும் உண்டு. கருத்தும் கற்பனையும் சிலரிடமே இருக்கின்றன.

சமுதாய வளர்ச்சியிற் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் முக்கிய இடமுண்டு. சமுதாயத்திலிருந்து பிரியும் கலைக்கு வாழ்வில்லை, சமுதாயத்தோடு தொடர்பில்லாத கலைஞனுக்கு வாழ்வில்லை. சமுதாயத்திற்காகவே கலைகளும் கலைஞர்களும். கலையினாற் சமுதாயத்திற்கு வாழ்வுண்டு, வழியும் உண்டு. உண்ணும் போது மட்டும் சுவை தரும் பண்டங்கள் பல. உண்ட பின்னும் நெடுநேரம் வரையிலும், உமிழ் நீர் உள்ளே செல்லும் போதெல்லாம் சுவை தரும் பண்டங்கள் மிகச்சில. அவ்வாறே கலைகள், அவற்றை அனுபவிப் போர் நெஞ்சினுட் பசுமையோடு கொலுவிருந்து சிந்தனையமுதத்தின் சுவையை ஊற்றெனச் சுரந்து கொண்டேயிருக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உணர்ச்சிக்கு உயர்வு தருவது கலை' என்பது செர்மனிய நாட்டு மேதை 'கதே' யின் கூற்று. "மக்களிடையே நல்லெண்ணத்தின் மறுமலர்ச்சியைத் தூண்டுவது கலை" என்பது ருஷ்யக் கலைஞர் லியோ டால்ஸ்டாயின் வாக்கு. 'அழகைப் படைத்தளிப்பவன் கலைஞன்' என்பது ஆங்கில அறிஞன் ஒஸ்கார் வைல்டின் பொன்மொழி. எனவே, சமுதாயத்தைப் பிரதிபலிப்பதுடன் சமுதாயத்தை உருவாக்கும் ஆற்றலும் கலைஞர்களுக்குண்டு என்பது இவற்றாற் புலனாகின்றது. ஒரு பாட்டாளியாக நடித்து, அவனது இன்ப துன்பங்களை வெளிப்படுத்தி, அவன் வாழ்வில் மேன்மையடைய வழிகாட்ட நடிகனால் முடியும். மக்களுடைய மனப்பான்மையையே நாட்டின் நலத்துக்காக மாற்றியமைக்கும் சக்தி நாடகத்திற்குண்டு. ருஷ்ய நாட்டிற் புதிய சமுதாயத்தை உருவாக்க நாடகமேடைகளே பெரிதும் காரணமாயிருந்தன. புதுப் புதுக் கருத்துக்களை மக்கள் மனத்திற் பதியவைப்பதற்குரிய வன்மை கலைக்குண்டு. 'ஆண்டானும் இல்லை; அடிமையும் இல்லை; குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்க்கை; அடிமைக்குத் தளையில்லை; யாரும் அடிமைகளில்லை' போன்ற சமுதாய வளர்ச்சிக்குரிய கருத்துக்களை மக்கள் உள்ளத்திற் பதிய வைப்பது கலைஞரின் கடனாகும். காந்தி மகானின் கதர்ப்பிரசாரம், மது விலக்கு, ஹரிஜன முன்னேற்றம், ஆலயப் பிரவேசம் போன்ற முற்போக்குக் கொள்கைகளை மக்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்தவை நாடகங்களே. சமுதாய அமைப்பு முறைகள் நல்லாயில்லாத காரணத்தால் நல்ல பல கருத்துக்களையும், சமுதாய அமைப்பு முறை மாறவேண்டுமென்ற எண்ணக் குவியல்களையும் மக்களிடையே பரப்பி அவர்களின் இன்ப வாழ்க்கையைக் காணத் துடித்த மேதை பெர்னாட்ஷா நாடகக் கலையையே அதற்குப் பயன்படுத்தினார். எனவே, நாட்டை முன்னேற்றப் பாதையிலே பீடு நடை போடச் செய்வது கலைஞர்களின் பொறுப்பு மிகுந்த கடமையாகும்.

பலவகையான தொழில்களில் வளர்ச்சியடைந்த, வாழ்க்கைக்கு வேண்டிய உணவு உடை உறையுள் கல்வி செல்வம் முதலியவற்றைப் பெற்று வாழும் சமூகம், அவற்றினால் மட்டும் அமைதி பெற இயலாது. உண்டு உடுத்து உறங்குவது மட்டும் சமூகத்திற்குத் திருப்தி அளிக்காது. சமூகம் நிறைவு பெற்று விளங்கத் துணையாக இருப்பவை கலைகள். மனித உள்ளத்திற்கு அழகையும் இன்பத்தையும் அளிப்பவை அவை. எனவே, பொருளாதாரத்தில் வளர்ச்சியுறும் சமூகம் கலைச் செல்வம் படைத்த சமூகமாகவும் விளங்கவேண்டும். தொழில் வளர்ச்சி பெற்ற சமூகத்திற் கலை வளர்ச்சியில்லாது போனால், முற்றான வளர்ச்சி பெற்றதாகக் கொள்ள இயலாது. கலைகள் மக்களுக்காகவே படைக்கப்படுகின்றன. மக்களுக்கு நிறைவு அளியாத கலைகளினால் எவ்வகைப் பயனுமில்லை. புலவன், இசையோன், கூத்தன், ஓவியன் என்று இன்னோர் தமது சொந்த ஆற்றலினாலே, மரபு பட்டு வந்த உருவங்களை மனதிற் கொண்டு சமுதாயத்திற்கேற்ற நுண்ணிய விகற்பங்களைத் தோற்றுவித்துச் செம்மை சான்ற உருக்களைப் பெருக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயம் உண்மையான வளர்ச்சிபெறும்.

JAFFNA PUBLIC LIBRARY
989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்கிறோம்.

எமது வாழ்வையும் பண்பாட்டையும் பிரதிபலிப்பவை எங்கள் கலைகள். அது மட்டுமல்ல வாழ்க்கை, பண்பாடு என்பன மலரவும், வளரவும் தூண்டு கோலாகவும் அவை அமைவன.

அதனாலேயே பாரதியார்—

"வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப் பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழி பெற்றுப் பதவி கொள்வார்."

சமூக வாழ்விலும் பண்பாட்டிலும் இன்றைய இளைஞர்களுக்கு அக்கறையோ ஆர்வமோ இல்லையென்றும் அவர்கள் மரபு நெறியிலிருந்தும் பண்பாட்டுத் தொடர்பிலிருந்தும் முறித்துக் கொண்டு போகவே முயல்கிறார்களென்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இக்கருத்து முறையானதல்ல என்பதை, பேராதனைப் பல்கலைக் கழகத்திற் பயிலும் மாணவர் வருடாந்தம் நடத்தும் கலைவிழாக்கள் தெளிவாகக் காட்டும்.

தமிழுக்கும் தமிழ்க் கலைகளுக்கும் நாம் பல்லாண்டுகளாக விழா வெடுத்துவருகிறோம்; கலைப்பகுதி மாணவர் மட்டும் பேராதனைப் பல்கலைக் கழகத்திற் பயின்ற காலத்தில் ஆண்டுதோறும் விமரிசையாக நடந்த தமிழ்க் கலைவிழாவைப்பின்னர் விஞ்ஞானப் பகுதியினரும், மருத்துவப் பகுதியினரும், பொறியியற் பகுதியினரும் சேர்ந்து கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றனர். தமிழ்மக்கள் மத்தியில் ஆர்வத்தையும், கலைப்பண்பையும் வளர்த்துவரும் எங்கள்கலை விழா சிங்களமக்கள் மத்தியில் தமிழ்க்கலைகளை அறிமுகப்படுத்தி நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் தூண்டிவருவது குறிப்பிடத்தக்கது. எமது கலை விழாவைப் பூரிப்போடு அனுபவித்துக் கொள்ளும் எல்லா அன்பர்களையும் பேரானந்தத்தோடு வரவேற்கிறோம். எமது நாடகவிழா மறுமலர்ச்சியாக அமைந்தது போலவே எமது கலைவிழாவும் ஒரு எழுச்சி பெற்ற தொன்றாக அமையும் என்று நம்புகிறோம்.

எமது விழாவில் மொழியியல் பொருளியல் அரங்குகள் சிறப்பிடம் பெறுகிறது. இலக்கிய அறிஞர்களும் பொருளியல் வல்லுனர்களும் வாரிவழங்கும் அறிவுச் செல்வம் எமது எதிர்கால வாழ்வுக்கும் முன்னேற்றத்துக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்காக அமையும் என எண்ணுகிறோம். எமது கலைவிழாவுக்கு வருகைதந்து எம்மையும் தமிழையும் வளர்க்க உதவிய அன்பர்களை இருகரம் நீட்டி வருக வருக என வரவேற்கிறோம்.

தா. நாகரத்தினம்
(உப தலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபட உதவும் கலைகள்.

சி. தில்லைநாதன்.
(விரிவுரையாளர், தமிழ்த்துறை.)

விடுதலையடைந்ததன் விளைவாகத் தேசிய உணர்வு மேலோங்கப் பெற்றுவரும் இலங்கை மக்கள் மத்தியிலே, தாய்மொழிகளை வளம்படுத்த வேண்டும், பாரம்பரியக் கலைகளைப் பேணவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து வருவதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், இருவேறு மொழிகளைப் பேசும் மக்கட் கூட்டத்தினர் வாழ்வது தேசிய ஒற்றுமைக்கு ஓர் இடராக இருக்கிறதென்று சிலர் கருதுவர்.

ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் இலங்கை இருந்த காலத்திலே, ஆங்கில மொழிமூலம் கல்விபயின்று, ஆங்கில மொழிமூலம் ஆட்சிநடாத்திய வகுப்பினர் ஆங்கில நாகரிகத்திலே பெரிதும் மூழ்கிக் கிடந்தனர். இந்நாட்டு மக்களின் மொழிகளும் கலைகளும் முக்கியத்துவம் இழந்து இருந்தன. விடுதலைக்கும் தேசிய விளிப்புக்கும் பின்னர் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தத்தம் மொழிகளையும் கலைகளையும், வளர்ப்பதில் உற்சாகமாக ஈடுபட்டுள்ளனர். பல்கலைக் கழகம்வரை இன்று தாய்மொழிகளின் வாயிலாகவே கல்வி போதிக்கப்படுகிறது. இதனால் சிங்களமக்களுக்கும் தமிழ்மக்களுக்கும் இடையே தொடர்பு அற்று வருகிறதென்று சிலர் கவல்கிறார்கள். ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்த காலத்திலே முக்கியத்துவம் இழந்திருந்த தொண்ணூறு சதவிகிதத்திற்கு மேலான 'இந்நாட்டு மன்னர்' இப்போதுதான் நாட்டு நடவடிக்கைகளில் பங்கெடுக்க வருகிறார்கள். அவர்கள் மத்தியில் நல்லுறவும் நன்னம்பிக்கையும் ஏற்பட வேண்டியது அவசியம் என்ற உண்மையும் தெளிவாகி வருகிறது.

இரண்டு மொழிகள் வழக்கிலிருப்பது தேசிய ஒற்றுமைக்கு ஒருதடை என்ற வாதம் வலுவற்றது. வேற்றுமையில் ஒற்றுமை கண்டுதான் மனிதவினம் இன்றுவரை வளர்ந்து வந்திருக்கிறது. நாற்புறமும் கடலாற் சூழப்பட்ட இந்நாட்டின் மடியிலே சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வதிகிறார்கள். இலங்கையின் தேசிய வளத்தோடுதான் அவர்கள்யாவரது வாழ்வும் பிணைக்கப்பட்டிருக்கிறது. சிங்கள மொழியும் தமிழ்மொழியும் சொற்றொடர் அமைப்பில் ஒற்றுமையுடையவை. இருமொழிகளுக்கும் பொதுவான பல சொற்கள் உண்டு. இருசாராருடைய கலைகளுக்கும் மதங்களுக்கும் சமூகவழக்கங்களுக்கும் இடயே பல ஒற்றுமைகள் உண்டு. இரு இனத்தவர்களும் ஒரேவகையான பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள்; ஒரே விதமாக நன்மை தீமைபற்றிச் சிந்திக்கிறார்கள். அத்தோடு, இந்நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சி எட்ட இருந்த மக்களையெல்லாம் கிட்டக்கொண்டுவந்து இணைத்து விட்டிருக்கிறது.

இந்நிலையில், எங்கள் தேசிய விளிப்புணர்ச்சியானது பிரிவினையைத் தூண்டுவதாக அமைவதானால், அது வேதனைக்குரியது. இன்றைய கல்விமுறை தேசிய ஒற்றுமைக்கு உதவவில்லையென்றால், அது கல்விமுறையின் குறையேயன்றிக் கற்பிக்கக் கையாளும் மொழிகளின் தவறல்ல. தேசத்தின் நலனில் அக்கறையோடு பங்குகொள்பவன் அத்தேசத்தின் கண்களான மொழிகளின்மீது விரோதம் பாராட்ட மாட்டான்.

ஒருமொழியென்ற கருவியைக் கையாண்டுதான் சிங்கள மக்களும் தமிழ்மக்களும் உறவுதொடங்கவேண்டும். என்பதில்லை. இதயபூர்வமான ஒற்றுமை அவர்கள் மத்தியிலே வளர முடியும். இதயத்தின் குரலை மொழி இரு இனத்தவர்களின் இதயங்களும் கலந்து அவர்களிடைய ஒற்றுமையுணர்ச்சி மேலோங்குமாயின், மொழித்தொல்லை அவர்களிடையே முட்டுக்கட்டையாக அமையாது. எமது வாழ்நாளின் அளவைக்கொண்டு காலத்தைக் கணக்கிட்டு நாம் திணற வேண்டியதில்லை. நாட்டில் நல்லுறவு வளர நமது சந்ததியினர் பணியாற்ற வேண்டும். காலப் போக்கிலே தடைகள் அகன்றுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கிலும் தெற்கிலுமாகத் தள்ளப்பட்டுக்கிடந்த தமிழ்ப் பொது மக்களுடைய குரலும் சிங்களப் பொதுமக்களுடைய குரலும் இன்று நாடாளுமன்றம்வரை ஒலிக்கின்றன. ஒருசாரார் குரலை மறு சாராரும் கேட்கின்றனர். இந்நிலையில், இருபகுதியினரும் ஒருவரை யொருவர் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதே முக்கியம். யாழ்ப்பாணத்தில் வாழும் விவசாயியின் இதயக்குரலும் மாத்தறையிலுள்ள விவசாயியின் இதயக்குரலும் ஒன்றே என்ற உண்மையை நாடுமுழுமையும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

தேசியப் போராட்டமொன்றிலே இலங்கைமக்கள் யாவரும் ஒருமுகமாய் ஈடுபட்டிருந்திருப்பாராயின் தேசிய ஒற்றுமை வளர அது வழிவகுத்திருக்கும். ஆனால், இந்திய நாட்டு மக்கள் விடுதலைப் போரிலே இணைந்தமாதிரி இலங்கை மக்களுக்கு இணைய ஒரு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. 179 மொழிகளையும் 544 பேச்சு வழக்குக்களையும் கொண்ட இந்தியநாட்டு மக்கள் இன்று மொழிப்பிரச்சினை குறித்து உள்ளே போராடினாலும், நாட்டுப்பற்று அவர்களது இரத்தத்திற் கலந்திருக்கவே செய்கிறது. இலங்கைவாழ் தமிழ் மக்களிற் பலர் இந்நாடு சிங்களவருடையது, இந்நாட்டுத் தேசியக்கொடி சிங்களவரின் கொடி என்ற எண்ண முடையவராகவே காணப்படுகின்றனர். அவர்கள் சிலரின் இதயங்கள் இலங்கைக்கு வெளியே இருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டுத் தமிழன் அண்மையிலுள்ள யாழ்ப்பாணத் தேர்தல் முடிவினை அறிவதிலும் பார்க்க, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள காஷ்மீர் தேர்தல் முடிவினை அறிவதிலேயே அதிக ஆர்வம் செலுத்துவான். ஆனால், பல இலங்கைத் தமிழருக்கு அனுராதபுரத் தேர்தல் முடிவினை அறிவதிலும் பார்க்கக் காஞ்சீபுரத் தேர்தல் முடிவினை அறிவதிற் கூடிய அக்கறை. இத்தகைய வருந்தத்தக்க நிலைக்கு இதயபூர்வமான தேசிய ஒற்றுமை ஏற்படாமையே காரணமாகும். எனவே, சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்கும் மத்தியில் மனப்பூர்வமான நல்லுறவை வளர்க்க முயற்சியெடுக்க வேண்டியது நாட்டின் வருங்கால நலனில் அக்கறை கொண்டவர்களின் கடமை யாகும். 'ஈழமண்டல நாடெங்கள் நாடே' என்ற எண்ணம் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் ஆழப் பதிய வேண்டும்.

மொழிவேறுபாடென்ற வரம்பை மீறி மக்களின் இதய உணர்வுகளைக் கிளறவல்ல கலைகளின் மூலம் மக்களிடையே சுமுகமான உறவினை வளர்த்தல் இயலும். இன்று விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக மனிதன் ஓரளவு இயந்திரத் தன்மை பெற்றுவிட்டாலும், அதிக ஓய்வுநேரமும் அவனுக்கு உண்டு. தொழிற்சாலைகளையும், அலுவலகங்களையும், கல்வி நிலையங்களையும் சேர்ந்தவர்கள் இயற்கையோடு பொருத்திருந்து வாழ்வை அனுபவிக்கும் நிலையில் இல்லாமையினால், கலைவடிவங்களை அவர்களுக்கேற்ற வகையில் உருவாக்கி அளிக்க வேண்டியது அவசியமாகிறது. பெருமாற்றங்கள் வேகமாக நிகழும் இக்காலப் பகுதியில், பளபளப்பான தோற்றத்தால் சபலமூட்டிக் கண்ணையும் கருத்தையும் கவரும் கலைகள் பொதுச் சந்தையில் விலையாகின்றன. நுகர்ச்சியாளருக்கென்று பொருளீட்டும் நோக்குடன் தயாரிக்கப்படும் திரைப்படங்களும், நூல்களும், நாடகங்களும், ஆடல்களும் மக்களின் இச்சையினைத் தூண்டியிழுக்கின்றன. மக்களை மயங்குதிசையிலே திருப்பாமல், ஆழ்ந்த மானிட நோக்கினையும், சரியான உலக அனுபவத்தினையும், செவ்விய ஒழுக்க நெறியினையும், சீரான வாழ்க்கைமுறையினையும் வளர்க்கக் கலைகள் துணையாகுமேயானால், அவை தேச ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பெரிதும் உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்லெண்ண மறுமலர்ச்சியினை மக்கள் மத்தியிலே தூண்டவல்லது கலை' என்ற ஞானி டால்ஸ்டாயின் கூற்று இங்கே நினைவுகூரத்தக்கது. அத்தகு பெருமை வாய்ந்த கலையின் சகல வடிவங்களும் எமது தேசத்தின் நல்வளர்ச்சிக்குப் பயன்படுதல் விரும்பத்தக்கது.

இலக்கியத்தை எடுத்துக்கொண்டால், இன்று முக்கியத்துவம் பெற்றுள்ள நாவல், சிறுகதைகளிற் கையாளப்படும் விடயங்கள் பெரும்பாலும் மக்கள் யாவருக்கும் பொதுவானவை. இலங்கையிலே, தமிழ்பேசும் மக்களின் இலக்கியங்களைச் சிங்கள மக்களும் சிங்களம் பேசும் மக்களின் இலக்கியங்களைத் தமிழரும் விரும்பிப் படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். சிறந்த இலக்கியங்கள் ஒருமொழியிலிருந்து மற்றமொழிக்குப் பெயர்க்கப்படல் வேண்டும். அத்தோடு, தமிழரைக் கதாபாத்திரங்களாகக் கொண்டு அவர்களது பிரச்சினைகளைக் கையாளும் கதைகளைச் சிங்கள எழுத்தாளரும், சிங்களவரைக் கதாபாத்திரங்களாகக் கொண்டு அவர்களுடைய அபிலாசைகளை நேசபாவத்தோடு பிரதிபலிக்கும் கதைகளைத் தமிழ் எழுத்தாளரும் தேசியக் கண்ணோட்டத்தில் படைத்தல் நன்று.

இரு பகுதியினருடைய நாடகங்களும், கூத்துக்களும், நடனங்களும், இசை நிகழ்ச்சிகளும் நாடு எங்கினும் அரங்கேற்றப்படல் வேண்டும். தமிழர் வாழ்வைச் சிங்களக் கவிஞர்களும், சிங்களவர் வாழ்வைத் தமிழ்க் கவிஞர்களும் உணர்ந்து கவிதைகளை நெய்தல் சாலவும் நன்று. இத்தகைய கலை முயற்சிகளாலே சிங்கள-தமிழ் மக்களின் மத்தியிலே நல்லுணர்வையும், நன்னம்பிக்கையினையும், ஒற்றுமையினையும் ஓங்கவைத்துத் தேசிய முன்னேற்றப் பாதையில் எமது நாட்டை இட்டுச் செல்ல இயலும்.

ஆண்டுதோறும் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தினரால் நடாத்தப்படுவது போன்ற கலைவிழாக்கள் இதமான கலையுணர்வை மக்கள் மத்தியில் வளர்ப்பதோடு தமிழ் மக்களின் சிறந்த கலைச் செல்வங்களை இந்நாட்டின் தேசியச் செல்வங்களாகப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வினையும் ஆர்வத்தினையும் சிங்கள மக்கள் மத்தியிலே தூண்டிவளர்க்கும் என்பதில் ஐயமில்லை.


சிறந்த புகைப் படங்களுக்கு

"சித்ராலயா"

படப்பிடிப்பாளர்

18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்:- 522


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
One & Only
Prime & Unique
True & Exclusive
Anthentic & Genuine

**SHOP**

FOR ALL YOUR REQUIREMENTS

**S. MEERA SAIBO & BROS.,**

**24, CASTIE HILL STREET,**

**KANDY.**

Phone:- 7008

*Visit . . . .*

**KANDY TEA STORES**

— *FOR* —

TEXTILES, SLACKS, SHIRTS, SUITINGS, WEDDING OUTFITS TOILET APPLIANCES, PRESENTATION SETS, CHILDREN'S READYMADE GARMENTS, COSTUME JEWELLERY, FANCY GOODS, HIGH GROWN TEA & SUNDRIES ETC.

*DISTRIBUTORS FOR*

**LANKA SALU SALA TEXTILES.**

*Phone:-* 7193

**No. 2 & 11, YATINUWARA VEEDIYA, KANDY.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*REPUTED FIRM IN KANDY FOR*

# QUALITY
## AND
# FASHIONABLE TEXTILES

LADIES AND GENTS
TAILORING
A SPECIALITY

**SIVAJI EMPORIUM**
69, Colombo Street,
KANDY.
Dial :- **468**

**PALAYAKAT**
76, Colombo Street,
KANDY.
Dial :- **399**

**SARASWATHI STORES**
90, Colombo Street,
KANDY.
Dial :- **7104**

*For the*

ANIMAL HUSBANDRY AND POULTRY BREEDERS

★ **DRUGS**
★ **POULTRY APPLIANCES**
★ **POULTRY FEEDS ALL VARIETIES**
★ **DAIRY FEEDS**
★ **DUCK FEEDS**
★ **HORSE FEEDS**

**All Available for Current Market Price**
**at**

# CEYLON FORAGE STORES

**189, COLOMBO STREET, KANDY.**

*Dial* :- **7494**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரி வழங்குகிறோம்.

முத்தமிழின் சீர் வளர்க்கும் மூத்த தமிழ்ச் சங்கத்தின் / தித்திக்கும் கலைவிழாவில் தீந்தமிழின் சுவை கூட்டி / நாட்டியமும், கூத்தும், நல்ல கருத்துக்களும் / பாட்டும் பண்ணிசையும், பல நூறு சொல்லசைவும் / காட்டும் திறன் கொண்டுவந்தோரே / கேட்டுக் களிக்கவெனக் கிளம்பிவந்த பெருஞ்சபையே கண்டபொழுதெல்லாம் கருத்துக்கள் தந்தெம்மை ஊக்குவித்த பெரியோரே உடனிருக்கும் குருகுலமே / மனமுவந்து நிதிதந்து மறத்தமிழின் புகழ் வளர்க்கும் / பாரி பரம்பரையே பைந்தமிழால் எல்லோர்க்கும் / வாரி வழங்குகிறோம் வற்றாத நன்றிகளை.

க. சரநாதன்

---

## இந்த மலரைத் தயாரிக்க உதவியவர்கள்

திரு. ஆ. பொன்னையா, செல்வி பத்மசீலி தம்பாபிள்ளை, திரு. இரா. சிவசந்திரன்

மேலும் இந்த மலரை அதிவிரைவாக அச்சிட்டதால் நேர்ந்த சில தவறுகளுக்காக எம்மை மன்னிக்க வேண்டுகிறோம்.

---

## தமிழ்ச்சங்க செயற்குழு 1968/69.

| | |
|---|---|
| காப்பாளர் | கௌரவ ஈ. ஓ. ஈ. பெரேரா |
| பெருந்தலைவர் | பேராசிரியர் வி. செல்வநாயகம் |
| பெரும் பொருளாளர் | கலாநிதி சு. வித்தியானந்தன் |

| | |
|---|---|
| தலைவர் | திரு. மு. குமாரசாமி |
| உபதலைவர் | திரு. தா. நாகரத்தினம் |
| செயலாளர் | திரு. அ. இரகுமூர்த்தி |
| பொருளாளர் | திரு. செ. சுவாமிநாதன் |
| இதழாசிரியர் | திரு. க. சரநாதன் |

உறுப்பினர்:—

| | |
|---|---|
| செல்வி. பத்மசீலி தம்பாபிள்ளை, | செல்வி. நாகேஸ்வரி பசுபதிப்பிள்ளை |
| செல்வி. தவமணி வேலுப்பிள்ளை, | செல்வி. தேவகுஞ்சரி கந்தையா |
| செல்வி. செல்வலட்சுமி இராமுபிள்ளை | |
| திரு. ஆ. பொன்னையா | திரு. நா. கந்தவேள் |
| திரு. யோசப் செல்வராசா | திரு. பாரூக் |
| திரு. இரா. இராதாகிருஷ்ணன் | திரு. மு. க. சிவபாதவிருதயர் |
| திரு. ப. சாட்சாதீஸ்வரன் | திரு. நா. தில்லைநாதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

## அவர்களின்

# நினைவு நிதி.

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கம் மறைந்த தமிழ்ப் பேராசிரியர்களின் நினைவுக்கும், தமிழ்த் தொண்டாற்றிய சில பெரியார்களின் நினைவுக்கும் நிதி திரட்டிப் பல்கலைக் கழகத்தில் அன்னார்களின் பெயர்களாற் பரிசில்கள் வழங்கி வருகின்றது.

விபுலானந்த அடிகள், பிரான்சிஸ் கிங்ஸ்பெரி ஆகியோர் பெயரில் ஆண்டுதோறும் இரு பரிசில் வழங்க நாடகத்தயாரிப்பில் இருந்து ஏறக்குறைய ரூபா ஐயாயிரம் (5000/-) 1955ம் ஆண்டில் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கம் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்தது. மீண்டும் 1957ம் ஆண்டில் அதேயளவு தொகையைத் தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர் ஆகியோர் பெயரால் நாடகத் தயாரிப்பிலிருந்து பெற்றுக்கொடுத்தது. இதன் பயனைப் பல தமிழ் மாணவர்கள், பெரியார்களின் பெயரில் பலனடைகிறார்கள்.

பேராசிரியர் க. கணபதிபிள்ளை அவர்கள் மறைந்த போது, அவர் நினைவுக்காக நிதி திரட்டப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் முடிவுசெய்தது. இதற்குரிய திட்டத்தை வகுத்துத் தமிழ்ச் சங்கத்துக்குப் பெருமையைத் தேடித் தந்தவர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களே. தமது ஆசானின் நினைவுக்காக நிதி திரட்டும் பொறுப்பை ஏற்று, தமது நாடகமாகிய வாலிவதையை யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, மட்டக்களப்பு கொழும்பு ஆகிய இடங்களில் மேடையேற்றி செலவுபோக யாழ்ப்பாணத்தில் ரூபா. 1782-30 உம் தெல்லிப்பழையில் ரூபா. 1018-35 உம் மட்டக்களப்பில் ரூபா. 2203-12 உம் கொழும்பில் ரூபா. 4139-35 உம் தமிழ்ச் சங்கம் மூலம் பேராசிரியர் நினைவு நிதிக்கு வழங்கியுள்ளார். பேராதனையில் மேடையேற்றிய இராவணேசன் நாடகம் மூலமும் ரூபா 529-95 திரட்டப்பட்டது. மொத்தம் ரூபா. 9673-07 கணபதிப்பிள்ளை நினைவு நிதிக்காக பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் இம்மேடையேற்றங்கள் மூலம் வழங்கியுள்ளது. இத் தொகையிலிருந்து பெறும் வட்டி ஆண்டு தோறும் தமிழை ஒரு பாடமாகப் பயிலும் கலைமாணவனுக்கு பேராசிரியர் கணபதிப் பிள்ளை நினைவாக வழங்கப்படும்.

இந்நிதியைச் சேர்த்து முடிப்பதற்கு கலாநிதி வித்தியானந்தன் அவர்கள் செய்த சேவைகள் அளப்பரியன. கலாநிதி வித்தியானந்தன் அவர்களின் தனிப்பட்ட முயற்சியினாலேயே இத் தொகை சேர்க்கப்பட்டது என்று கூறுவது மிகையாகாது. இத் தொகையைச் சேர்த்து பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்துக்கு பெருமை தேடித் தந்த கலாநிதி வித்தியானந்தன் அவர்களுக்கு நாம் மிகவும் நன்றியுடையவர்களாக விருக்கின்றோம்.

பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மில்க் வைற் சோப்

தரத்திற் சிறப்புமிக்க மில்க் வைற் உற்பத்திப் பொருட்களையே பாவியுங்கள்

- மில்க் வைற் நீல சோப்
- மில்க் வைற் பார் சோப்
- மில்க் வைற் சலவைப் பவுடர்
- மில்க் வைற் மெடிக்கேட்டட் வாசனை சோப்

மில்க் வைற் என்பது நம்பிக்கை உள்ள ஒரு வியாபாரச் சின்னம்!

## மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

தந்தி:- மில்க் வைற் — — — தொலை பேசி:- 7233

# இல்போட் (ILFORD)

குறைந்த விலையில் சிறந்த புகைப்படக் கருவிகளுக்கு ' இல் போட் '

உங்கள் சகலவிதமான தேவைகளும் எம்மால் பூர்த்தி செய்யப்படும்

முன்னொரு போதும் இலங்கையில் விற்பனையாகாத அளவு குறைந்த விலையில் எம்மிடம் பொருட்களைப் பெறலாம்.

எம்மிடம் கிடைக்கும் பொருட்கள்:-
- புகைப்படச் சுருள்
- Cut - Films
- புகைப்படக் கடதாசி
- இரசாயனப் பொருட்கள்

தேவைப்பட்டோருக்கு விலைபட்டியல் அனுப்பிவைக்கப்படும்

' இல் போட் ' ஏக விநியோகஸ்தர்:-

## மல்லிகா ஸ்டுடியோ

கண்டி.

தொலை பேசி இல:- 7065


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது முயற்சிகள்

தமிழ்ச்சங்கத்தின் இருபதாவது செயற்குழுவினராகிய நாம் நடத்திய சிறப்பு நிகழ்ச்சிகளில் இறுதியானதாகக் கலைவிழா நடைபெறுகிறது. குன்றிற் குடியிருக்கும் முருகனுக்கு வரவேற்பளித்த விழாவோடு எமது செயற்குழு செயற்பட ஆரம்பித்தது.

எமது சங்கத்தின் முன்னை நாட்பெருந் தலைவரும் பேராசிரியருமாகிய அமரர் கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவு குறித்து நாம் நடத்திய கூட்டத்திற்கு வருகை தந்த விரிவுரையாளர்கள், நண்பர்கள் பேராசிரியர் ஞாபகார்த்த நிதியொன்றைத்திரட்டி ஒரு மாணவனுக்குக் கல்வி வசதி அளிக்குமாறு பணித்தனர். நாம் இப்பணியின் வழி சென்று மதிப்புக்குரிய விரிவுரையாளர் வித்தியானந்தன் அவர்களின் முயற்சியால் சங்க அங்கத்தவர்களைக் கொண்டே நடிக்கப்பட்ட "வாலிவதை" என்ற கூத்தைப் பல இடங்களில் மேடையேற்றியதோடு இராவணேசன் என்ற கூத்தையும் மேடையேற்றி நிதியைத் திரட்டியுள்ளோம்.

மாணவரின் ஒத்துழைப்பு, பலம்பெருகும்படியாக இறுதியாண்டு மாணவரது பிரிவின் பொருட்டு பிரிவுபசாரக் கலந்துரையாடல் வைபவமொன்றையும் அதைத் தொடர்ந்து நுவரெலியாவுக்கு உல்லாசப் பயணம் ஒன்றையும் ஒழுங்கு செய்தோம்.

மேலும் திரு. கி. வா. ஜகநாதன், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், வங்கி மா அதிபர் சி. லோகநாதன் போன்றோரின் அரிய சொற்பொழிவுகளை அளித்தோம்.

இதுவரை என்றுமே நடைபெறாத வண்ணம் நாடகவிழா ஒன்றை நடத்தியபோது மாணவர்களாலே தயாரித்து நடிக்கப்பட்ட பதினைந்து நாடகங்களை மேடையேற்ற முடிந்தது. இதன்பயனாக தமிழ் நாடகங்கள் வளரவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்தவர்களின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டிருக்குமென்பது எமது அசையாத நம்பிக்கை.

மாணவர்களிடையே ஒரு விவாதப் போட்டியை நடத்தி அவர்களின் வாதத்திறமைக்கு ஊக்கங்கொடுத்தோம். சங்க அங்கத்தவர் தொகை அதிகரித்துவருவதால் தேவைகளும் அதிகரிக்கின்றன. இதனால் அங்கத்தவரின் அங்கிகாரத்துடன் சங்கயாப்பிற் சில திருத்தங்களைச் செய்தோம். இது சங்க முயற்சிகள் பரவலாக அமைய உதவும் என எதிர்பார்க்கிறோம்.

எமது கலை விழாவுக்குப் பொது மக்கள் பலர் பணஉதவி அளித்தனர். அதன் விபரம் எமது பத்திரிகையான இளங்கதிரில் வெளிவரும்.

இதுவரை எமது சங்க முயற்சிகள் உங்களுக்குப் பூரண திருப்தி அளித்திருக்குமென நினைக்கிறோம். அந்த முயற்சிகளில் ஆர்வத்தோடு கலந்துகொண்டதுடன் வேண்டிய வேளைகளில் வெவ்வேறு உதவிகளை அளித்த விரிவுரையாளர்கள் மற்றும் பெரியோர்கள் சக மாணவ சகோதரர்கள் எம்மால் மறக்க முடியாதவர்கள்.

நன்றி.

செயலாளர்,

அ. இரகுமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் நாள் நிகழ்ச்சிகள்.

இடம்:- மருத்துவபீட மண்டபம்

(25 - 3 - 69)

மங்கள விளக்கேற்றல்.
தமிழ்த் தாய் வணக்கம்.
வரவேற்புரை.
தொடக்கவுரை.
தலைமையுரை.

**மாலை 5 மணி—பொருளியற் கருத்தரங்கம்.**

"இலங்கையின் பொருளாதார சுபீட்சத்தை நோக்கி"

தலைவர் **திரு பாலகிருஷ்ணன்**

எமது பொருளாதாரத்தை இப்போது நோக்கியுள்ள பிரச்சனைகள்
**கலாநிதி வை. கனகசலிங்கம்**
(பதில் அதிபர், பொருளாதாரத்திட்ட அமைப்பு அமைச்சு)

கல்வியும் மனித சக்தியும் பொருளாதார வளர்ச்சியும்
**திரு சி. செல்வரத்தினம்**
(பதில் அதிபர், பொருளாதாரத்திட்ட அமைப்பு அமைச்சு)

பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்கு
**திரு ந. சண்முகரத்தினம்**
(மாஜி மாணவ சங்கத் தலைவர்—விவசாய அதிகாரி, எம்பிலிபிட்டியா)

சமூக அபிவிருத்திக்கு, **திரு. எஸ். வன்னியசிங்கம்**
(பேராசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி)

அன்னிய செலாவணி நெருக்கடி, **திரு. A. T. பெனடிக்ற்**
(அதிபர், சாட்டட் எகவுண்டனற்.)

வெளிநாட்டு மூலதனத்தின் பங்கு, **திரு. அ. ஜெயரத்தினம்**

சமூக மாற்றமும் பொருளாதார வளர்ச்சியும், **திரு. பொ. சங்கரப்பிள்ளை**

**மாலை 8 மணி நாடகம்** **"பக்த நந்தனார்"**

நடிகமணி **வி. வி. வைரமுத்து குழுவினர்**

நன்றியுரை.

## இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்.

இடம்:- கலைமண்டபம்

(26 - 3 - 69)

**காலை 8-மணி** சங்கக் கொடியேற்றல்.
மங்கல விளக்கேற்றல்.
தமிழ்த் தாய் வணக்கம்.
வரவேற்புரை.

**காலை 8-30 மணி** நாவலர் கேடயப் பேச்சுப் போட்டி.

**காலை 9-00 மணி** விவாதம் — "பாரதி இலட்சிய கவிஞன்.
வாதிகள்:- கொழும்பு பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம்.
பிரதிவாதிகள்:- பேராதனை பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா

காலை 10-00 மணி — கவியரங்கம் — "ஏனடி நீ ஏங்குகிறுய்"

தலைவர் நாவற்குழியூர் நடராசா,
தமிழ்ச் சேவை அதிகாரி (இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்)

கலந்துகொள்வோர் — திரு. நா. சுப்ரமணியம், திரு. பி. சத்தியசீலன்,
திரு. மகாதேவன், கவிஞர் கந்தவனம், திரு. கமலநாதன்
திரு எஸ். சிவகடாட்சம், செல்வி சி. யோகேஸ்வரி,
திரு. எஸ். சுபத்திரன், திரு. எஸ். விஸ்வலிங்கம்.

காலை 11-00 மணி — நாட்டுப்பாடல்— கச்சேரி

நடேசன் சிவசண்முகமூர்த்தி B. A. (இலங்கை) குழுவினர்.

ந ன் றி யு ரை .

## மாலை நிகழ்ச்சிகள். இடம்:- மருத்துவ பீட மண்டபம்.

மாலை 4-00 மணி — வாழ்த்து.

இலக்கியக் கருத்தரங்கம் "தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி"

| | |
|---|---|
| தலைவர், | கலாநிதி சு. வித்தியானந்தன் |
| கால ஆராய்ச்சி, | திரு. தனஞ்செயராசசிங்கம் |
| இலக்கியக்கொள்கை, | கலாநிதி க. கைலாசபதி |
| சமூக நோக்கு, | திரு. அ. சண்முகதாஸ் |
| மொழி ஆராய்ச்சி, | கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை |
| இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி, | திரு எம். ஏ. எம். சுக்ரி |
| இலக்கியவடிவம், | திரு. சி. தில்லைநாதன் |

மாலை 6-00 மணி — மெல்லிசை — இளம்வானம் பாடிகள்.

மாலை 7-00 மணி — நாடகம் — "வாடகை வீடு" திரு. சிவதாசன் குழுவினர்.

ந ன் றி யு ரை

## 3ம் நாள் நிகழ்ச்சிகள். இடம்:- மருத்துவ பீட மண்டபம்.

(27 - 3 - 69)

மாலை 4-30 மணி — விளக்கேற்றல்.

வாழ்த்துப்பா.

இசைக் கச்சேரி — செல்வி அருந்ததி சிவசுப்பிரமணியம்.

வயலின் — செல்வி பத்மலோசனி, செல்வி கு. சாந்தி

மாலை 5-30 மணி — வாத்திய இசை.

வீணை — திருமதி யோகா இராசநாயகம், செல்வி அருந்ததி சிவசுப்பிரமணியம்

புல்லாங்குழல் — ரவிக்குலன்

மாலை 6-30 மணி — ஓரங்க நாடகம் — எஸ். சுபைர்தீன்

மௌன நாடகம் — எஸ். எம் ரீ. எம். நிசார் குழுவினர்.

மாலை 7-00 மணி — பரிசளிப்பு,

மாலை 8-00 மணி — பரத நாட்டியம் — லீலா நாராயணன்.

ந ன் றி யு ரை .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் மலர - -

ஆண்டுதோறும் நடைபெறும் கலைவிழா இம் முறை ஒரு பெருவிழாவாக மலருகிறது. தமது ஓயாத உழைப்பினிடையே எமது விழாவை வாழ்த்தி தமது அன்பை நல்கிய பேராசிரியர் வரதராசன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

எமது சங்கத்துடன் நீண்டகாலத் தொடர்புடைய கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் இம்முறை வாழ்த்துமூலம் எமக்கு உற்சாகத்தை ஊட்டியமைக்காக நாம் பெரிதும் மகிழ்கிறோம்.

சிங்களக் கலைத்துறைக்கே தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவரும், எமது சங்கத்தின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் உன்னிப்பாக அவதானித்து வருவதுடன் பலவகையில் எமக்கு முன்னோடியாக இருந்து எமது விழாவை வாழ்த்திய வருமான பேராசிரியர் ஹெட்டியாராச்சி அவர்களுக்கு எமது நன்றிகள் உரியவை.

நாம் செய்த முயற்சிகள் ஒவ்வொன்றிலும் இணையாகநின்று சலியாது ஊக்குவித்த எமது சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களுக்கும் பெரும் பொருளாளர் கலாநிதி வித்தியானந்தன் அவர்களுக்கும் நாம் கடமைப்பட்டவர்கள்.

எமது கலைவிழாவிற்காகவும் இந்த இதழ் உருப்பெறவும் பல ஆலோசனைகளை அளித்த பெரியவன் கலாநிதி கைலாசபதி அவர்கள் என்றும் எமது நினைவிற்குரியவர்.

இந்த மலருக்காகத் தமது சிரமங்களைப் பொருட்படுத்தாது கட்டுரைகளை அளித்த விரிவுரையாளர்கள், கவிதைகள் அளித்த நண்பர்கள் என்றும் எமது மதிப்புக்குரியவர்கள்

மேலும் இந்த மலருக்காக விளம்பரங்கள் தந்த கனவான்கள் விளம்பரத்தைப் பெற்றுத்தந்த நண்பர்கள், இவ் விதழைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த "ரோயல்" அச்சகத்தினர் எமது அன்புக்குரியவர்கள்.

எமது விழாவுக்கான நிகழ்ச்சிகளை அளித்த, பலவழிகளில் உதவிய பெரியவர்கள், மாணவ நண்பர்கள் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சியோடு நன்றிகூறுகிறோம்.

அகங்குளிர்ந்த நன்றிகள்.

நா. தில்லைநாதன்.
(நிர்வாகக்குழு சார்பில்)

JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*People's pleasure being fulfilled,*

**YARL RICE MILL – MANIPAY**

**யாழ் அரிசி ஆலை — மானிப்பாய்**

- YARL RICE is prepared by experienced workmen,
- YARL RICE is purely free from stores,
- YARL RICE being liked by all,
- YARL RICE suits the taste of all in the north.

*PRODUCERS:-*

# YARL RICE MILL

**IRUVIL ROAD – MANIPAY.**

*Telephone:-* **No. 553 Manipay.**

# REFINE & CO.

**40, GRAND BAZAAR - - - JAFFNA.**

*— FOR —*

## GARMENTS & TEXTILES

*WORK SHOP:-*

## REFINE DRESS MFY.,

**No 3, Jummah Mosque Lane,**

**GRAND BAZAAR — — — JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Like Having a Cow on Your*

*Kitchen Shelf*

MILK BOARD

# STERILISED MILK

THE LONG LIFE MILK

THAT NEEDS NO

## REFRIGERATION.

Printed at Royal Printers, 190, Colombo Street, Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org